## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்

| | | | |
|---|---|---|---|
| 2024–ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02–ம் நாள் திங்கள்கிழமை பிரதிவாதி தரப்பு 3–ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1) ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமாணம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | நாகேஸ்வரன் | தொழில்: | |
| த.பெ: | | சமயம்: | |
| கிராமம்: | | சாதி: | |
| வட்டம்: | | வயது: | |

**02. 09.2024 OS.No.7/2023 பி.வா.சா. 3 நாகேஸ்வரன் ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1) தாவா வழக்கு யார் தாக்கல் செய்துள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும். ராஜாஜி, ஈஸ்வரன், ராஜபாண்டி ஆகியோர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். பிரதிவாதி செல்வி எனக்கு என்ன உறவு முறை என்றால் எனது தாயார் ஆவார். எனக்கு சாட்சியளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வரவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி செல்வி என் அம்மா என்ற முறையில் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கு விபரங்கள் முழுவதும் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

2) எனது தாயார் உடல் ஆரோக்கியமாக உள்ளார் என்றால் சரிதான். எனது தாயார் ஏற்கனவே இந்த வழக்கில் சாட்சியளித்துள்ளார் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்மந்தமாக சாட்சியளிக்க எனக்கு எந்த அருகதையும் இல்லை என்றால் சரியல்ல. நான் இன்று வரை படித்துக்கொண்டிருக்கிறேன் என்றால் சரிதான். நான் நிரூபணவாக்குமூலத்தில் சொன்னவாறு வழக்குச்சொத்துக்களை நிர்வகித்து வரவில்லை என்றால் சரியல்ல. நான் பிறந்தது எப்போது என்றால் 10.11.1998 ஆகும்.

3) நான் நிரூபணவாக்குமூலம் பாரா 4–ல் என் தாயார் சொல்லி கேள்விப்பட்டதாக சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்றால் சரியல்ல. என் தாயாரின் தகப்பனார் பெயர் என்னவென்றால் சி.வா.வீ.கருப்பையா ஆகும். மேற்படி கருப்பையாவின் முதல்தாரத்தின் பெயர் என்னவென்றால் க. பிச்சைமுத்து ஆகும். இரண்டாம்தாரத்தின் பெயர் க.பிச்சையம்மாள் ஆகும். பிச்சைமுத்துக்கு பிறந்தவர் செல்வி இல்லை என்றால் சரியல்ல. பிச்சையம்மாளுக்கு பிறந்தவர்தான் செல்வி என்றால் சரியல்ல. என் தாயார் செல்வி(எ) கழுங்காயி என்பதை காண்பிப்பதற்கு என்னிடம ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. என் தாயார் எந்த நீதிமன்றத்திலும் அவரது பெயர் செல்வி(எ) கழுங்காயி என்பதை காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4) நான் நிரூபணவாக்குமூலம் பாரா 5–ல் கூறியுள்ளவாறு பிச்சையம்மாள் என்பவரின் பிள்ளைகள் கோபால், கணேசன், அய்யம்மாள், பூமாரி(இறப்பு) என்றும்

அவர்களுடன் பிறந்தவர்தான் செல்வி என்பதை மறைத்து சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. ஆதிமூலத்தேவரும், ராமுத்தேவரும் உடன்பிறந்தவர்கள் என்றால் சரிதான். இறந்தபோன ஆதிமூலத்தேவருக்கு வாரிசுசான்றிதழ் வாங்கியுள்ளார்கள் என்றால் வாங்கியுள்ளார்கள். ஆதிமூலத்தேவரின் வாரிசுசான்றிதழில் கழுங்காயி(எ) செல்வி என்பவர் வாரிசாக உள்ளாரா என்றால் உள்ளார். அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள்.

5) ஆதிமூலத்தேவரின் மகள் பிச்சைமுத்து என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிச்சைமுத்து மகள்தான் செல்வி என்பதை காண்பிப்பதற்கு வருவாய்துறை ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆதிமூலத்தேவரின் மகள் பிச்சைமுத்து என்பதற்கும், பிச்சைமுத்து மகள்தான் செல்வி என்பதற்கும் தகுந்த வருவாய்துறையிலிருந்து பெறப்பட்ட வாரிசுசான்றிதழ் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளார்களா என்றால் தாக்கல் செய்துள்ளார்கள். அவ்வாறு வருவாய் துறையிலிருந்து வாரிசு சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) 14.9.1969–ம் தேதியில் மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்ரேஸ்வரர் கோவிலிருந்து பிச்சைமுத்துவிற்கும் மேற்படி கருப்பையாவிற்கும் திருமணம் நடைபெற்றது என்பதற்கு மேற்படி ஆலயத்தின் அலுவலக ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்திற்கு வரவழைத்தால் உண்மையான விபரம் தெரியும் என்றால் சரிதான். மேற்படி ஆலயத்தில் உள்ள திருமண பதிவு பேரேடு ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் வரவழைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

7) வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். முதல் இலக்க சொத்தின் சர்வே எண்.209/2, இரண்டாம் லக்க சொத்தின் சர்வே எண்.367/14 ஆகும். மேற்படி இரண்டு லக்க சொத்துக்களும் பிரதிவாதி செல்விக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு தனிப்பட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் ய்யப்பட்டுள்ளது. என்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியவில்லை. தாவா இரண்டு லக்க சொத்திற்கும் யுடிஆருக்கும் முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் சி.ரா.ஆதிமூலத்தேவர் பெயரில் இருந்தது. யுடிஆருக்கும் பின்பு யார் பெயரில் இருந்தது என்றால் சி.ரா.ராமுத்தேவர் பெயரில் இருந்தது. அது எந்த ஆவணம் என்று எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் ஆவணம் என்று சொன்னார்கள்.

8) யுடிஆருக்கு முன்பு வரை சி.ரா.ராமுத்தேவர் பெயரில்தான் பட்டா பாஸ்புத்தகம் இருந்தது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 பட்டா பாஸ்புக் ஆவணத்தில் 1974–லியே சி.ரா.ராமுத்தேவர் பெயரில் சர்வே எண்.109/2–ல் பட்டா உள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனக்கு எல்லா விபரங்களும் தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. யுடிஆர் 1985–ம் வருடம் ஏற்பட்டது

என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் ராமுத்தேவருக்கும், ஆதிமூலத்தேவருக்கும் ஏற்பட்ட பாகஉடன்படிக்கையின் படி ராமுத்தேவர் பெயருக்கு பாத்தியப்பட்டு பட்டா ஏற்பட்டு அவர்தான் தாவா சொத்துக்களில் விவசாயம் செய்து வருகிறார் என்றாலும், ராமுத்தேவருக்கு பின்னிட்டு வாதிகள் வாரிசாக அடைந்து அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

9) சா.சா.ஆ.1ஆவணத்திற்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சம்மந்தமல்ல. சா.சா.ஆ.2 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ.3 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ.4 ஆவணமான ராமுத்தேவர் என்பவர் வேறு வழக்கில் கொடுத்த வாக்குமூலம் தாவா வழக்கிற்கு சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. சா.சா.ஆ.5 ஆவணத்தில் என் தாயார் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். என் அம்மா தரப்பினர் இல்லை என்பதால் மேற்படி சா.சா.ஆ.5 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. என் அம்மாவிற்காக நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தாவா சொத்து விபரங்கள், ஆவணங்கள் பற்றி தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

**(மறு விசாரணை இல்லை).**

Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.